(அ) திருத்துறைப்பூண்டியில் தற்போது உள்ள பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று சுமார் 19.5 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்தை செயல்படுத்த பேரூராட்சி உத்தேசித்துள்ளது.

[முற்பகல் 9-40]

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் திருத்துறைப்பூண்டிக்கு ஒரு பெரிய திட்டத்தை அறிவித்திருப்பதற்கு நன்றி சொல்லி, திருத்துறைப்பூண்டி பேரூராட்சி நகராட்சியாகக்கூடிய அந்தஸ்து பெற்றிருப்பதால் இந்த 19½ இலட்சம் ரூபாய்த் திட்டம் எந்த காலக் கட்டத்திற்குள் நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, கடன் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் ஆணையாளர்களை நியமிக்கும் திட்டம்.

* வினா எண்—133 திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் ஆணையாளர்களை நியமிக்க அரசு எண்ணியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், கூடுதலாக எத்தனை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக 1981-82-ல் சேர்க்கப்பட்டுள்ள 150 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கூடுதல் ஆணையர் (Additional Block Development Officer) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த கூடுதல் ஆணையாளருடைய பணி நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பார்த்து செயல்படுத்த வேண்டிய பொறுப்பு அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டம் செயல்படும் அந்த ஊராட்சி ஒன்றியங்களில் இந்த ஆணையாளர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு இந்த வேலைகளை பார்வையிட்டு, துரிதப்படுத்தும் வகையில் வாகன வசதி செய்துதரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஏற்கெனவே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜீப்பை பயன்படுத்தி இந்த வேலைகளை எல்லாம் பார்வையிடலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டங்கள் செயல்படுகிற வட்டங்களில் புதிதாக ஆணையர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒன்றியங்களில் இருக்கிற ஆணையர்களுக்கும் தனி அதிகாரிகளுக்கும் ஏற்கெனவே இருக்கின்ற வேலைகளைப் பார்ப்பதற்கே நேரம் சரியாகிவிடுகிறது. ஆகையால் இந்த தன்னிறைவுத் திட்டப் பணிகள் சிறப்பாக நடைபெற தனியாக பி. டி. ஓக்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே இதற்கு தனியாக மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் தேவையில்லை. தன்னிறைவுத் திட்டத்தில் இப்போது வேலை அதிகமாக இல்லை. ஏனென்றால் கோட்டத்தில் கோட்டாட்சிப் பணிகளை எல்லாம் கவனிக்க இந்த அடிஷனல் பிளாக் டெவலப்மென்ட் ஆபீசர்ஸ் போடப்பட்டிருப்பதால் மற்றவர்கள் ஏற்கெனவே இருக்கிற வேலைகளை கவனித்தால் சரியாக இருக்கும்.

திரு. எஸ். சிவராமன்: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டப்பணிகளைக் கவனிக்க கூடுதல் ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சில ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகளை அங்கே ஏற்கெனவே இருந்த ஆணையர் நான்தான் பார்ப்பேன் என்று சொல்லுகிறார்; கூடுதலாக நியமிக்கப்பட்ட ஆணையர் நான்தான் பார்ப்பேன் என்று சொல்லுகிறார். இப்படி இந்த இருவருக்கும் ஒரு போட்டா போட்டி ஏற்பட்டு வேலைகள் சரியாக நடக்க முடியாமல் இருப்பதால் யார் அந்த வேலைகளைச் செய்வது என்று வரன்முறை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இது குறித்து ஏற்கெனவே கோட்ட வளர்ச்சி அதிகாரிகள், கூடுதல் கோட்ட வளர்ச்சி அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு ஒன்று கூட்டப்பட்டு அதிலே அவர்களுடைய பணிவரன்முறை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அவர்கள் பணியாற்றவேண்டும்

1981 ஆகஸ்ட் 29]

திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, தனி ஆணையர் நியமிக்கப்பட்டும் கூட அவர்களுக்கு உதவியாக டைபிஸ்ட், கிளார்க் போன்ற பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால் பணி முடக்கம் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே அப்படிப்பட்ட பணியாளர்களை உடனடியாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அத்தகையப் பணியாளர்கள் ஏற்கெனவே வட்டாட்சி, கோட்டாட்சி. மாவட்ட அளவில் உள்ள அலுவலகங்களில் இருக்கிறாாகள். அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தன்னிறைவுத் திட்டம் செயல்படும்ஒன்றியங்களில் கூடுதல் ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள்; வரவேற்கிறேன். அதே நேரத்தில் அந்த ஆணையருக்கும் ஏற்கெனவே இருக்கும் ஆணையருக்கும் அந்த வட்டாரத்தைச் சுற்றிப்பார்க்க ஒரு ஜீப்தான் இருக்கிறது. அந்த ஜீப்புக்கு கூடுதல் பெட்ரோல் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்லாமல் அந்த ஜீப் ஓட்டுநர் இரவு பகலாக ஓட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, அதிகப்படியான பெட்ரோல் வழங்குவதோடு, கூடுதலாக ஒரு ஓட்டுநரும் நியமிக்கப்படுவாரா என்று அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை)

ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலை உருளைகள் வாங்கும் திட்டம்.

*வினா எண் 134— திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒவ்வொரு 'ரோட் ரோலர்' பொது நிதியிலிருந்து வாங்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு கொண்டு வரப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு நெடுஞ்சாலைப் பிரிவின் எந்த ஊராட்சி ஒன்றியத்தில் உபரிப் பொதுநிதியாக மூன்று இலட்சத்திற்குமேல் மிக அதிகமாக இருப்பு உள்ளதோ அந்த ஒரு ஊராட்சி ஒன்றியம் சாலை உருளை வாங்கிக்கொள்ளலாம் என்றும் மற்ற ஒன்றியங்கள் வாடகை செலுத்தி அதைப் பயன்படுத்தலாம் என்ற ஆணை இருக்கிறது.

திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: தலைவர் அவர்களே, பொது நிதி குறைவாக உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு நிதியிலிருந்து ஒதுக்கிக் கொடுத்து பிறகு பெற்றுக்கொள்கின்ற வகையிலே உத்தேசம் அரசுக்கு இருக்கின்றதா?